# ஆற்றுப்படை நூல்களில் இசை

***சே.மோட்சம்***
*ஆய்வியல் நிறைஞர்*
*சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

இசை என்பது இசைவிப்பது. வயப்படுத்துவது. ஆட்கொள்வது என்ற பொருளுடையதாகும். இசை என்ற வடிவத்தின் தோற்றததிற்கு முந்தைய வடிவம் ஒலியின் பண்பட்ட வடிவமே இசையாகும். பண்டுதொட்டு நமது பண்பாட்டுடனும். கலாச்சாரத்துடனும் இரண்டறக் கலந்திருப்பது இசையாகும். சங்கப்பாடல்களில் குறிப்பாக ஆற்றுபடை நூல்களில் இசைச் செய்திகள் நிறைந்துள்ளன. சங்ககால மன்னர்கள் இசைக்கலைஞர்களைச் சிறப்பாக ஆதரித்தனர். மக்கள் பாடல் இயற்றியும், நடித்தும் தங்கள் பொழுதை இன்பமாகவும், பயனுள்ளதாகவும் கழித்தருந்தனர். இக்கட்டுரைமூலம் ஆற்றுப்படை நூல்களில் இசை மனித வாழ்வுடன் கலந்திருத்தலைக் காணலாம்.

**இசைக்கலை**

இசை எனும் சொல் இயை “எனும்” வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது. இசையானது “கந்தருவ வேதம்” என்று அழைக்கப் பெறும் சிறப்பினை உடையது.

இசை மூன்று வகைப்படும்
1) இன்னிசை
2) ஒத்திசை
3) தொகுப்பிசை
   1. ஒற்றைச் சுரங்கள் இனிமையாகச் சேர்வது இன்னிசை இந்தியாவின் இசை இன்னிசை வகையைச் சேர்ந்தது.
   2. ஒத்த சுரங்களின் சுர அடுக்குகள் தம்முன் ஒத்திசைப்பது “ஓத்திசை” என்பர். இவை மேலை நாட்டு இசை இந்த வகையைச் சேர்ந்ததாகும்.
   3. ஒவ்வொரு சுரத்திற்கும் வேறொரு இணைச்சுரம் சேர்க்கப்பட்டு இரண்டும் ஒன்றாக இசைப்பது “தொகுப்பிசை” என்பர்.

இசையின் ஒலிக்குறிப்பு சுரம் எனப்படும். “சுரம்”என்பதற்கு இனிமை உடையது. இசைத்தல் என்று பொருள். இசைத்தல் என்பதற்கு பொருந்துதல், ஒன்றாதல் என்று பொருள்படும்.

**இசைபே புணர்ச்சி**

இசைபே புணர்ச்சி என்பது தொல்காப்பிய உயிரியல் நூற்பா.
இந்தியாவில் இந்துற்தானி இசை, கருநாடக இசை என இருபிரிவுகள் இன்று வழக்கில் உள்ளன.

**சுரங்களின் பெயர்கள்**

| பழந்தமிழ் | நூல் சுரங்களின் பெயர்கள் |
|---|---|
| குரல் | சட்சம் |
| துத்தம் | ரிஷபம் |
| கைக்கிளை | காந்தாரம் |
| உழை | மந்தியமம் |
| இளி | பஞ்சமம் |
| விளரி | தைவதம் |
| தாரம் | பிஷதம் |

என சுரங்கள் ஏழு வகைப்படும். எழுசுரங்களும் ஒன்றை விட மற்றது வலியது என்ற வரிசைகள் ஒலிப்பது “ஆரோசை” (ஆரோகணம்) ஆகும்.

ஏழு சுரங்களையும் இறங்கு வரிசையில் ஒலிப்பது அமரோசை (அவரோகணம்) ஆகும்.

சுரம் என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் "நரம்பு" என்பதாகும். சுரங்கள் சேர்ந்து "ராகம்" என்பர். "ராகம்" என்பதற்கு உரிய தமிழ்ச் செல் "பண்" என்பதாகும். தேவாரப் பாடல்களின் இசை பகற்பண், இராப்பண், பொதுப்பண் என மூன்று வகையாக பிரிப்பர்.

**இசைக் கருவிகள்**

தமிழ்நாட்டில் இசைக்கருவிகள் குறித்து நான்கு வகையாகப் பிரிப்பர்.

1) தோல்கருவி
2) துளைக்கருவி
3) நரம்புக்கருவி
4) கஞ்சக்கரவி

கஞ்சக்கருவி என்பது உலோகக் கருவிகளைக் குறிக்கும். தோற்கருவிகள் - பேரிகை, படகம், இடுக்கை, உடுக்கை, மத்தளம், சல்லி, கரவு, போன்றன. துணைக்கருவிகள் - வங்கியம், கொம்பு, தாரை, குழல், தாளம், சங்கு போன்ற கருவிகள் என்பர். நரம்புக்கருவிகள் - யாழ், வீணை, கின்னரி, கஞ்சக் கருவிகள் கைமணி, தாளம், கஞ்சதாளம், தொண்டி

பஞ்சமரபு என்ற பண்டைய இசைத்தமிழ் நூல் பாடகர் பாடுவது படற்றுக்கருவி என்று கூறுவர்.

**முதற்சங்கம்**

முதற்சங்கத்தில் இசைக் கருவிகள் பெருநாரை, பெருகுருகு, (முதுநாரை, முதுகுருகு) என்ற இசைநூல்கள் இருந்தன. பெருநாறை என்பது இசைப்பற்றிய நூல் நரம்பு (நான், நாரை) பெருகுருகு என்பது துணைக் கருவிகள் பற்றிய இசை நூல்.

**இடைச் சங்கம்**

இக்காலக் கட்டத்தில் பேரிசை, சிற்றிசை என்ற இசை நூல்கள் இருந்தன.

**கடைச் சங்கம்**

கடைச் சங்கத்தில் இசை மரபு, இசை நுணுக்கம், ஐந்தொகை (அல்லது) பஞ்சமரபு எனும் இசை நூல்கள் இருந்தது அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையிது பங்ச பாரயம், பரத சேனாப தீயம், மணிவாணர், நாடகத் தமிழ், இசை நுணுக்கம் தாளவகை கொத்து என்ற இசை, இலக்கண நூல்களை குறிப்பிட்டுள்ளார். ஐந்திணைக்கும் உரிய "யாழ்" குறித்து இலக்கண நூல்கள் கூறுகின்றன.

**தமிழிசை வரலாறு**

ஒவ்வொரு இனத்திற்கும் உரியதாய் ஓர் இசை மரபு இருக்கும் தமிழுக்கு உரிய இசை மரபு தமிழிசை ஆகும். இசையோடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர் என்கிறார் தொல்காப்பியர்.

| | | |
|---|---|---|
| தொண்டைக் குரலாக | - | குரல் (குழல்) |
| நாவுக் குரலாகத் | - | துத்தம் |
| உள்ளாக்குக் குரலாக | - | சைக்கிளை |
| தலைக் குரலாக | - | உழை |
| நெற்றிக் குரலாக | - | இளி |
| மார்புக் குரலாக | - | விளரி |

மூக்குக் குழல் குரலாகத் - தாரம் இசை பிறை அசை நிலை பொருளோடு புணர்தல் எனும் மூன்றும் சொல்லடுக்கு என்பர்.

**சங்க காலத்தில் இசை**

சங்க காலத்தில் பாணர், பாடிணி, பொருநர், கூத்தர், விறலியர், கிணையர், கோடியர், பறையர், வயிரியர், துடியர் என்ற மக்கள் இசையுடன் கூறிய பெயரைத் தங்களை அடையாளப்படுத்தும் பெயராக வைத்திருந்த நிலையை அறிய முடிகிறது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே பாணர்கள் தமிழகத்தில் இருந்தனர் என்றும் பாணர் மூலம் தலைவியின் ஊடலைத் தீர்த்தனர் என்றும் (தொல்காப்பியம் - செய்யுளியல் - 1982) தொல்காப்பிய நூற்பா கூறுகின்றது. கருப்பொருள்கள் பற்றிக் கூறும் தொல்காப்பியர் பறை, பாழ் என்ற இசைக் கருவிகளைக் குறிப்பிடுகின்றார்.

**வழிபாட்டில் இசை**

திருமுருகாற்றுப்படையில் திருவாவினன் குடியில்முருகனை வழிபட்ட காந்தர்வர்கள் மனதை யாழிசையில் பண்படுத்தியவர்கள். இவர்கள் யாழிசை மீட்டிப் பாடிக் கொண்டே முருகன் சந்திதிக்குச் செல்ல அவர்தம் மகளிரும் அவர்களைத் தொடர்ந்து சென்று முருகனை வழிபட்டனர்.

**செவி நேர்பு வைத்த செய்வுறு திவலின்**
**நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்**
**மென்மொழி மேவலர், இன்நரம்பு உளர**
**.......................................................**
**மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்க (திருமுருகாற்றுப்படை: 140-147)**

காந்தவர்கள் இசையை நுண்ணிதின் உணர்தற்குரிய கூரிய செவியால் இசையில் ஆர்ந்து யாழ்ப்பயிற்சி செய்து தங்கள் மனதைப் பண்படுத்ணியவர்கள். யாழிசைப் பயிற்சி மனதைப் பண்படுத்தி, தூய்மைப்படுத்த இனிமையாக்குகின்றது. தூய்மையான மனதுடன் இறையுணர்வுடன் ஒன்றி இறைவனை வழிபட இசை ஏதுவாக இருந்தநிலை இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

**வெறியாட்டு**

குறிஞ்சி நிலத்தில் வேலனுக்கு (முருகனுக்கு) வெறியாட்டு நடத்துதல் வழக்கம். நோயூற்றவர்கள் அந்நோய் தீர வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தினர். மறியறுத்துக் கடுமையான முறையில் இந்த ஆட்டம் நடைபெறும். குறிஞ்சிப் பண்ணுடன் இசைக்கப்படும் இப்பாடல்கள் அச்சவுணர்வைத் தோற்றுவிப்பதாக அமையும். இதை வெறியாட்டுப் பாடல் என்பர். பலவிதமான இசைக்கருவிகள் பெருமுழக்கத்துடன் இசைக்கப்படும் அத்தகைய வெறியாட்டத்தை குறமகளிர் நடத்தியதாக திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

**மாண்தலைக் கொடியொடு மண்தி அமைவர**
**...............................................................**
**நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி**
**இமிழிசைஅருவியொடு இன்இயம் கறங்க (திருமுருகாற்றுப்படை: 227-240)**

குறவர்கள் வெறியாட்டத்தின் போது குறிஞ்சிப் பண்ணால் பாடல்கள் பாடியும். பல இசைக்கருவிகள் இசைத்தும், ஊதுகொம்புகள் பலவற்றை ஊதியும், மதியொலிக்கும் இசைக்கருவிகள் இசைத்தும் வழிபட்டனர் என்பது புலனாகின்றது.

**குறிஞ்சி நிலவழிபாட்டில் குறிஞ்சிப் பண்**

தெய்வங்களைக் குறிஞ்சி நிலத்தில் பணிந்து வணங்கும் போது குறிஞ்சிப் பண்ணைப் பாடவேண்டும் என்பது மரபாகக் கூறப்பட்டுள்ளது. மலையிடங்களில் உறையும் தெய்வங்களைக் கவர வணக்கத்துடன் கூத்தரும் விறலியரும் குறிஞ்சிப் பண்ணைப் பாடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**நறுங்கா அடுக்கத்துக் குறிஞ்சிப் பாடி**
**கைதொழுஉப் பரவி பழிச்சினிர் கழியின்"" (மலைபடுகடாம்: 358-360)**

**நடுகல் வழிபாடு**

நடுகல்லையும் தெய்வ வழிபாடு போலவே தமிழர்கள் வழிபட்டனர். மலைபடுகடாமில் கூத்தர்கள் நடந்து செல்லும் பாதையில், வீரர்கள் நினைவாக நடப்பட்டுள்ள நடுக்கல்லைக் கடந்து செல்லும் போது இசைக்கருவியை இசைத்து நடுகல்லை வழிபட வேண்டும். வீரனுக்கு அது விருப்பமானது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஒன்னார்த் தெவ்வர் எலைவுஇடத்து ஆர்த்தென**
**...............................................................**
**கல்ஏக கவலை எண்ணுமிகப் பலவே**
**இன்புறு முரற்கை நும்பாட்டு விருப்பு ஆக**
**தொன்று ஒழுகு மரபின் நும்மருப்பு இருத்துத் துனைமின்"" (மலைபடுகடாம்: 388-390)**

**கொற்றவை வழிபாட்டில் தடாரிப்பண்**

காடுறை தெய்வமான கொற்றவையை வழிபடும் போது அத்தெய்வங்கள் மனம் மகிழும்படி இசைக்கலைஞர்கள் தடாரிப்பண்ணை வாசித்தனர்.

**வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்**
**காடுஉறை கடவுட்கடன் கழிப்பிய நின்றை (பொருநராற்றுப்படை: 51-52)**

பண்டைத் தமிழர் முருக வழிபாட்டில் குறிஞ்சிப் பண்ணையும் கொற்றவை வழிபாட்டில் தடாரிப் பண்ணையும் இசைத்ததை அறிய முடிகிறது.

**மருத்துவத்தில் இசை**

இசை நோயுற்றவர்களின் பிணியைத் தீர்க்கும் நிவாரணியாகப் பயன்பட்டுள்ளது. பண்டைத் தமிழர் கொடிய காயமுற்ற வீரர்களின் காயம் ஆறும்படியும். பேய்பிடித்து கொண்டவர்கள் வருத்தம் தீரும்படியும் இசை இசைத்தனர். குறிப்பாக காஞ்சிப்ண்ணைப் பாடினர் என்பது கூறப்பட்டுள்ளது.

**கொடுவளீ பாய்ந்தென, கொழுநர் மார்பில்**
**நெடுவரி விழுப்புண் தணிமார் காப்பு என**
**அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல் (மலைபடுகடாம்: 302-304)**

இங்கு கொடிச்சியர் தம் கணவர் மார்பில் புலி பாய்ந்ததால் ஏற்பட்ட காயம் ஆறுவதற்குக் காஞ்சிப்பண்ணைப் பாடினர்.

**பாதுகாப்பிற்கு இசை**

பண்டைத் தமிழர்கள் கொடிய விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் கொடிய பாலை வழியில் ஆறலைக் கள்வர்களிடமிருது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இசையைப் பயன்படுத்தி உள்ளனர். கள்வர்களையும் மாற்றி அருள் உணர்வு கொள்ளுமாறு செய்யும் தன்மை இசைக்கு உண்டு என்று பொருநராற்றுப்படை உரைக்கின்றது.

**ஆறலைக் கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலைப் பெயர்க்கும் மருவுஇன் பாலை"" (பொருநராற்றுப்படை: 21-22)**

மலைபடுகடாமில், கூத்தர்கள் குறவரும் மயங்கும் குன்றத்தில் நடந்து செல்லும் போது, இரவு நேரத்தில் கொடிய விலங்குகளின் அச்சத்தினின்று உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டே அவ்விடத்தைக் கடந்து செல்வீர்களாக என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**இயங்கல் ஓம்பி நும் இயங்கள் தொடுமின் (மலைபடுகடாம்: 277)**

கள்வர்களையும் கொடிய விலங்குகளையும் இசைவிக்கும் இசையின் ஆற்றலைப் பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர்.

**வேளாண்மையில் இசை**

பண்டைத் தமிழர்கள் பயிர்களைப் பாதுகாத்தற் பொருட்டு இசைக்கருவிகளை இசைத்தும், தொழில் செய்யும் போது குறிப்பாக நெல்நாற்று நடும் பொழுதும், களை எடுக்கும் பொழுதும், ஏற்றம் இறைக்கும் பொழுதும் தொழில் வருத்தம் தெரியாதிருக்கப் பாடல்கள் பாடி வேளாண்மை செய்தனர் என்ற செய்திகள் சங்க இலக்கியகளில் காணப்படுகின்றன. மலைபடுகடாமில் சேம்பு, மஞ்சள் என்ற கிழங்கு வகைப் பயிர்களை பன்றிகள் அகழ்ந்து விடும். அப்பயிர்களின் விளைச்சலைப் பாதுகாப்பதற்காகப் பறைகளை அடித்து பன்றிகளை விரட்டிக் குறவர்கள் பாதுகாத்தனர்.

**சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்**
**பன்றிப் பறையும் (மலைபடுகடாம்: 343-344)**

மலைப்பகுதிப் பயிரான தினை விளைந்த பொழுது தனைக்கதிரைப் பாதுகாப்பதற்காக மகளிர் தட்டை என்ற இசைக்கருவியை முழக்கி கிளியை விரட்டினர்.

**ஒலிகழைத் தட்டை புடையுநர், புனந்தொறும் (மலைபடுகடாம்: 328)**
**நல்போட் சிறுதினை படுபுள் ஓப்பி**
**...............................................**
**தழலும் தட்டையும் குளிரும் பிறவும் (குறிஞ்சிப்பாட்டு: 38.43)**

**வள்ளைப் பாட்டு**

வள்ளைப்பாடல், உலக்கையைக் கொண்டு தினை அல்லது நெல்லை உரலில் குற்றும்பொழுது பெண்கள் பாடுகின்ற பாடலாகும். இதை இன்றைய நாட்டுப்புற மக்கள் உலக்கைப்பாட்டு மலைவாழ் மகளிர் தினை அரிசியை வள்ளைப் பாட்டு பாடிக்கொண்டே குத்தின நிகழ்ச்சியை

**தினைக்குறு மகளிர் இசைபடு வள்ளையும் (மலைப்படுகடாம்: 342)** என மலைபடுகடாம் உரைத்துள்ளது.

**விழாக்களில் இசை**

கலைநிகழச்சி இல்லாமல் விழாக்கள் சிறப்படைவதில்லை. இசையுடன் இயைந்ததாகவே எல்லா கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. பண்டையத்தமிழர் விழாக்கள் நடத்தும் பொழுது இசைக்கருவிகளைத் தவறாது பயன்படுத்தியுள்ளனர். ஆடலும் பாடலும் இசையும் விழாக்களின் மகிழ்வுணர்விற்குக் காரணமாகின்றது. மலைபடுகடாம், நன்னன் நாட்டில் விழாக்கள் எப்பொழுதும் நடத்தபடியிருக்கும் என்று கூறுகின்றது.

**முழவு துயிலறியா வியலுள் (மலைபடுகடாம்: 350)**

விழாக்கள் நடபெறும் பொழுது இசைக்கருவிகள் இடையறாது முழங்கிக் கொண்டிருக்கும் என்பதை

**முழவு இமிழும், அகலாங் கண்**
**விழவு பின்ற வியல் மறுகின் (மதுரைக்காஞ்சி: 327-328)**
**முழவம் கண்துயிலாத முதுநகர் (சீவக சிந்தாமணி: 856)**

பல இலக்கியங்களிலும் காண முடிகிறது.

**மன்னரின் புகழைப் பாடுவதில் இசை**

மன்னரின் புகழ் இம்மண்ணுலகில் உள்ளளவும் மறையாமல் இருக்கும்படி பாடிய புலவர்கள் பொருநர், பாணர், கூத்தர் என்ற இசைக் கலைஞர்களாக அறியப்பட்டிருந்தனர். வறுமை வாழ்க்கை வாழ்ந்த இவர்கள் மன்னரின் புகழைப் பாடி மன்னா் அரண்மனையில் சிறப்பிற்குரிய விருந்தினராகத் தங்கியிருந்த நிலையையும், பெரும் செல்வங்களைப் பரிசாகப் பெற்ற நிலையையும் ஆற்றுபடை நூல்கள் உரைக்கின்றன. மன்னரின் புகழைப் பாடிய இசைக்கலைஞர்கள் முறைப்பட இசைக்கருவிகளை இசைத்துப் பாடின தன்மையை வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்.

**சீருடை நன்மொழி நீரொடு சிதறி (பெருநராற்றுபடை: 23-24)**

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

பண்டைத் தமிழகத்தில் இசை மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்தது. இவ்விசை மக்களின் உணர்ச்சியைப் பெருக்கி உள்ளத்தை உருக்கும்பான்மையால் வாழ்வியலில் பல நிலைகளிலும் (பிறப்பு முதல் இறப்பு வரை) உறவாடி நின்றுள்ளதை அறிய முடிகின்றது. வழிபாட்டில் மனதைத் தூய்மைப்படுத்தி இறைவுணர்வுடன் ஒன்றச்செய்கின்றது. இறைவனையும் இறந்த வீரர்களையும் மன்னர்களையும் மகிழ்விப்பதற்காக இசைக்கலைஞர்கள் இசைக்கருவியை இசைத்து அவர்தம் புகழை ஏத்திப்பாடினர். இசை, ஆறலைக் கள்ளவர்களையும் கொடிய விலங்குகளையும் தீய செயல்கள் செய்ய விடாமல் தடுக்கின்றது. வீரனின் கொடிய காயத்தையும் ஆற்றும் அருமருந்தாகின்றது.

தொழில் செய்யும் போது தொழிலின் கடுமையை எளிதாக்குகின்றது. வேளாண்மையில் விளைச்சலைப் பெருக்குகிறது. விலங்குகள், பறவைகள் ஆகியன பயிர்களை அழிக்காமல் பாதுகாக்கின்றது. இவ்வாறாகப் பண்டைத் தமிழரின் வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள இசை நம் தமிழரின் மரபுவழிச் சொத்தாகும். நம் தமிழிசையை தமிழர்களாகிய நாம் பயன்படுத்தி மகிழ்வோமாக